
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1232

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

68

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# மகத்தான மனிதருக்கு மணிமண்டபம்!



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவர்களோடு நட்பு பாராட்டியவர், கண்ணியமிகு காயிதே மில்லத் என்பது மட்டுமின்றி, தமிழ்நாட்டின் மாபெரும் தலைவர்கள் வரிசையில் போற்றி வணங்கத்தக்கவரும்கூட. இந்திய நாட்டையும் தாய்மொழியாம் தமிழையும் காக்க அர்ப்பணிப்புடன் தொண்டாற்றியவர். இந்திய அரசியலமைப்புச் சட்ட உருவாக்கத்தின்போது, ஆட்சிமொழியாக இந்தியைத் திணிக்க நடந்த முயற்சிகளை முறியடித்தவர். 1965-இல் பாகிஸ்தான் மூலமாக இந்தியாவுக்கு அச்சுறுத்தல் வந்தபோது, நாட்டைக் காக்கத் துடித்தவர்.

அத்தகைய கண்ணியமிகு தலைவர்தான், 1967-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஒரு வெடிப்பைப்போல அரசியல் பேரெழுச்சியை அறிஞர் அண்ணா ஏற்படுத்தியபோது, அதற்குத் துணை நின்றவரும்கூட. அண்ணாவுக்குப் பிறகு கலைஞருடனும் அதே உறுதுணையோடு ஆதரவுக்கரம் நீட்டியவர். அதனால்தான் காயிதே மில்லத் அவர்கள் உடல்நலம் குன்றிவிட்டார் என்ற செய்தியறிந்ததும், அப்போது கோவையில் இருந்தாலும்கூட, அனைத்து அலுவல்களையும் விட்டுவிட்டு, ஓடோடி வந்தார் கலைஞர். 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் நாள், காயிதே மில்லத் காலமானார்.

அவரது உடல், அன்று காலை பொதுமக்கள் இறுதி மரியாதை செலுத்துவதற்கு வசதியாக, ராயப்பேட்டையில் உள்ள புதுக்கல்லூரிக்குக் கொண்டுவரப்பட்டது. பெரியாரின் நெருங்கிய நண்பரான ஈரோடு கே.ஏ.எஸ்.அலாவுதீன் சாஹிப், கூட்டத்தினரை விலக்கி விட்டு, காயிதே மில்லத் உடல் அருகே பெரியாரை அழைத்துச்சென்றார். அப்போது தேம்பி அழுத பெரியார், “இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. உத்தமமான மனிதர். முஸ்லிம் சமுதாயத்துக்கு இவரைப் போன்ற தலைவர் கிடைப்பது கஷ்டம்” என்று அனைவரின் காதுகளிலும் விழும்படி கூறினார். கலைஞர் உள்ளிட்ட தலைவர்கள் அனைவரும் அஞ்சலி செலுத்தினர். தலைவர்கள் அஞ்சலிக்குப் பிறகு, திருவல்லிக்கேணியில் உள்ள வாலாஜா மசூதியில், காயிதே மில்லத் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அதன்பிறகு நெருக்கடி நிலை, 12 ஆண்டுகள் எதிர்க்கட்சி வரிசையில். மீண்டும் 1989-இல் கழகம் ஆட்சியமைத்தபோதும் இரண்டே ஆண்டுகளில் ஆட்சி கலைக்கப்பட்டது என 20 ஆண்டுகள் ஓடிவிட்டன.

அதனால், 1996-2001 வரையிலான ஆட்சிக்காலம்தான் கழகத்திற்கு மீண்டும் முழுமையான ஆட்சிக்காலமாக இருந்தது. ஆனால், அந்தக் காலகட்டத்திலும் தேசிய அரசியலில் நிலவிய குழப்பமான சூழலைத் தணிக்கவேண்டிய கடமையும், அன்றைக்கு கழகத்திடம் இருந்தது. அத்தனை மாறுபட்ட சூழல்களுக்கு மத்தியிலும், காயிதே மில்லத் மறைந்து அப்போது கால் நூற்றாண்டு ஆகியிருந்தாலும், கலைஞரின் மனத்தில் இருந்து நீங்காமல் நிறைந்தே இருந்தார் காயிதே மில்லத். அதனை வெளிப்படுத்தும் விதமாகத்தான், காயிதே மில்லத்துக்கு ‘மணி மண்டபம்’ கட்டப்படும் என 2001-ஆம் ஆண்டு அறிவித்தார் கலைஞர். காயிதே மில்லத் மகளிர் கல்லூரியில் 25-2-2001 அன்று, மணிமண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

முஸ்லிம் இயக்கங்களைச் சேர்ந்த எல்லா பிரிவினரும், அவர்களின் தலைவர்களும் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு கழக அரசின் அப்பணியைப் பெரிதும் போற்றிப் பேசினார்கள். 51 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் விறுவிறுவென நடைபெற்றன. சில மாதங்களில் முழுமையாகப் பணிகள் முடிவுற்றன. ஆனால், அதற்குள் சட்டமன்றப் பொதுத்தேர்தலும் அறிவிக்கப்பட்டு விட்டது. தேர்தலுக்குப் பிறகு ஆட்சி மாறிய சூழலில், காயிதே மில்லத்தின் மணி மண்டபத்தைத் திறப்பதற்கு அக்கறையில்லாமல் கைவிட்டது, அ.தி.மு.க. அரசு.

> **வள்ளுவர் கோட்டத்தைக் கட்டியவர் கலைஞர் என்பது போல, கண்ணியமிகு காயிதே மில்லத்துக்கு மணிமண்டபத்தை எழுப்பியவர் கலைஞர் என்றே வரலாறு பேசுகிறது.**

### அகற்றப்பட்ட கலைஞர் பெயர்

தி.மு.கழகத்தின் சார்பில் தொடர் கண்டனங்கள் வரவே, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஒருவழியாக 08.05.2003 அன்று, மணி மண்டபம் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் அடிக்கல் நாட்டு விழாவில், அன்றைய முதல்வராக இருந்த கலைஞர் பெயரில் நாட்டப்பட்ட அடிக்கல்லை அகற்றியது, அ.தி.மு.க. ஆட்சி. இது மக்களிடையே கோபத்தைத் தூண்டியது. கழகத்தினர் வெகுண்டெழுந்தார்கள். கண்டனங்கள் குவிந்தன.

09.05.2003 அன்று, இது தொடர்பாகக் கடிதம் ஒன்றை எழுதிய கலைஞர், “இளமைக் காலம் முதல் இஸ்லாமிய பெருமக்களுடன் இணைந்து பொதுவாழ்வு நடத்தியவன் என்ற முறையிலும், கான் பகதூர் கலிபுல்லா சாகிப் அவர்கள் கலந்துகொண்ட திருவாரூர் முஸ்லிம் லீக் மாநாட்டில், 1940-களிலேயே பங்கேற்றுப் பணியாற்றிய காலந்தொட்டு, கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களுடன் இறுதிக் காலம் வரையில் நட்புறவுடன் பழகியவன் என்ற முறையில், அந்த இனிய தலைவரின் எளிமையும் இதயத் தூய்மையும் என்னை மிகவும் கவர்ந்தவை என்ற காரணத்தால் எழுப்பப்பெற்றதே என் தொகுதியில் அமைந்துள்ள காயிதே மில்லத் மணி மண்டபமாகும்.

என் பெயர் பதிக்கப்பெற்ற அடிக்கல்லை அகற்றிவிட்டதாகச் சிலர் என்னிடம் சொன்னார்கள். அது உண்மையோ அல்லவோ எனக்குத் தெரியாது. உண்மையெனில், அதற்காகக் கவலைப்படப்போவதில்லை. வள்ளுவர் கோட்டம் திறப்பு விழாவின்போதுகூட நான் அழைக்கப்படவுமில்லை. நான் நாட்டி வைத்த அடிக்கல்லும் அந்தக் கோட்டத்தின் திறப்பு விழாவின்போது காணப்படவில்லை. அதற்காக வள்ளுவர் கோட்டம் யாரோ கட்டியது என்றா வரலாறு கூறியது? அதே போல காயிதே மில்லத் மணிமண்டபத்தில், நான் பதித்த அடிக்கல் அகற்றப்பட்டிருந்தாலும், அந்தக் கல் அடியேன் பெயரைச் சொல்லிக் கொண்டுதான் இருக்கும். கல் இருந்தால் பார்த்துவிட்டுப் போய்விடுவார்கள். இல்லாவிட்டால், அதைப்பற்றி சிறிது நேரம் பார்வையாளர்கள் உரையாடிவிட்டுப் போவார்கள்” என்றார்.

கலைஞர் கூறியது போல வரலாற்றில் அ.தி.மு.க.வின் பெயர் நிலைக்கவில்லை. வள்ளுவர் கோட்டத்தைக் கட்டியவர் கலைஞர் என்பது போல, கண்ணியமிகு காயிதே மில்லத்துக்கு மணிமண்டபத்தை எழுப்பியவர் கலைஞர் என்றே வரலாறு பேசுகிறது. அதுதான் உண்மையும்கூட.

...நீளும்

## பாலியல் குற்றங்களில் கைதாகும் த.வெ.க.வினர்!

தமிழ்நாட்டில் ஒரே நாளில், 5 சிறுமிகளுக்குப் பாலியல் வன்கொடுமை நிகழ்ந்துள்ளது, பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அதிலும், ‘த.வெ.க. கட்சியைச் சேர்ந்தவர்களால், பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழல் உருவாகியுள்ளது. புதிய ஆட்சி அமைந்த நாளில் இருந்து, ஆளுங்கட்சி நிர்வாகிகளே பெண்களுக்கு எதிரான கொடூர குற்றச்செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர். அதை, இந்த அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறது’ எனச் சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, சேலத்தில் த.வெ.க. நிர்வாகி மணிகண்டன் என்பவர், 50-க்கும் மேற்பட்ட பெண்களுக்குப் பாலியல் தொல்லை கொடுத்து, சுமார் 8,000-க்கும் மேற்பட்ட ஆபாச வீடியோக்களுடன் சிக்கிய சம்பவம், தமிழ்நாட்டையே உலுக்கியுள்ளது. இதனை ‘மற்றொரு பொள்ளாச்சி சம்பவம்’ எனப் பலரும் குற்றம்சாட்டுகின்றனர். மணிகண்டன் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், ‘பொள்ளாச்சி வன்கொடுமையை அ.தி.மு.க. அரசு மூடிமறைக்க முயன்றதைப் போல, இந்தக் கொடுஞ்செயலில் ஈடுபட்ட குற்றவாளியைக் காப்பாற்ற முயலாமல், உரிய தண்டனை பெற்றுத்தர, அரசு முயல வேண்டும் எனப் பொதுமக்கள் வலியுறுத்திவருகின்றனர்.

த.வெ.க.வின் ஆலந்தூர் வடக்குப் பகுதிச் செயலாளரான வேம்புலி என்பவர், ஒரு பெண்ணுக்குப் பாலியல் தொல்லை அளித்து கைது செய்யப்பட்டுள்ளார். ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்த த.வெ.க. நிர்வாகிகளான பாலசுப்பிரமணியன் மற்றும் ஜெயபால் ஆகியோர், கடந்த மாதம் வேலை வாங்கித் தருவதாகப் பெண்ணை காரில் கடத்திச்சென்று, குளிர்பானத்தில் மயக்கமருந்து கொடுத்து, கூட்டுப்பாலியல் வன்கொடுமை செய்ததாகப் புகார் எழுந்தது. ‘இந்தச் சம்பவம் குறித்து, அந்தக் கட்சியின் தலைமை நிர்வாகிகள் வரை புகார் அளித்தும் நடவடிக்கை இல்லாத நிலையில், ‘மேலிடத்தில்’ பேசி வேலை வாங்கித் தருவோம்’ என, த.வெ.க. எம்.எல்.ஏ. சரவணன் சமரசம் பேசியதாகப் பாதிக்கப்பட்ட பெண் குற்றம் சாட்டினார்.

இப்படி, தமிழ்நாடு முழுவதும் த.வெ.க. கட்சியினரின் பாலியல் வன்கொடுமைகள், அத்துமீறல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது. பெரும் அபாயமாக மாறியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



அகிலன் கண்ணன்



### ‘கயல்விழிக்கு’ கலைஞர் வழங்கிய பட்டம்!

என் தந்தை எழுத்தாளர் அகிலன் அவர்கள், 1964-65-இல் ‘கல்கி’ இதழில் தொடராக எழுதி வெளிவந்த நாவல், ‘கயல்விழி’. அது நூலாக 1965-இல் பதிப்பிக்கப்பட்டு, 1968-இல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த தமிழ் நாவல் பரிசைப் பெற்றது. இந்த நாவலை எழுதிய என் தந்தை அகிலன் அவர்களைப் பாராட்டும் விதமாக, குன்றக்குடி அடிகளார் விழா எடுத்தார். குன்றக்குடியில் நடைபெற்ற விழாவில், அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு பாராட்டிப் பேசி, ‘நற்கதை நம்பி’ என்ற பட்டத்தையும் வழங்கினார்.

**- எழுத்தாளர் அகிலன் கண்ணன்,**
**பதிப்பாளர், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்வருக

### எதையும் தாங்கும் இதயம் அண்ணா!

1957-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தருமபுரி நகரக் கழகம் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்திற்கு உரையாற்றிடச் சென்றிருந்தார். அவரது வருகைக்கு மாற்றுக்கட்சியைச் சேர்ந்த சிலர், எதிர்ப்பு தெரிவித்து நோட்டீஸ் அச்சிட்டு விநியோகித்தனர். அந்த நோட்டீசை கையில் வைத்துக்கொண்டு, மேடையில் உரையாற்றினார் அண்ணா. ‘கழகத் தோழர்கள், அந்த நோட்டீசை பொறுமையுடன் வாங்கிப் படிக்க முடியுமானால் படியுங்கள். இல்லாவிட்டால் படிக்காதீர்கள். ஆனால், இந்தத் துண்டறிக்கைக்குப் பதில் சொல்வதற்கு நான் தருமபுரிக்கு வரவில்லை, கட்சிக் கொள்கைகளையும் தோழர்களுக்கான செயல்முறைகளையும் விளக்க வந்திருக்கிறேன்’ என்று சுட்டிக்காட்டி உரையாற்றி, பதிலடி அளித்தார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900